[திரு, கி, மனோகரன்] [1979 ஏப்ரல் 25

பிரிவு 2, 3 ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, ''தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 5) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண். 31/1979) நிறைவேற்றப்பெற வேண்டும்.''

என மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன் வடிவு நிறைவேற்றப்பெற்றது.

(6) அறிவிப்புகள்— தொடர்ச்சி.

(இ) சம்பளம் வழங்கல் (திருத்த) சட்ட முன் வடிவு 1979

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு, 1979 ஆம் ஆண்டு சம்பளம் வழங்கல் (திருத்த) சட்ட முன் வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண். 26/1979) பேரவையில் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ள ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

(7) அரசினர் சட்ட முன் வடிவுகள்—தொடர்ச்சி.

ஓ. சம்பளம் வழங்கல் (திருத்த) சட்ட முன் வடிவு 1979.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : சட்டமன்றப் பேரவைத் துணைத் தலைவரவர்களே, ''தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு சம்பளம் வழங்கல் (திருத்த) சட்ட முன் வடிவு*(சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண். 26/1979) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்''

என்று மொழிகிறேன்.

*திரு. என். சங்கரையா : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு நிதியமைச்சரவர்களால் இப் போது முன் மொழியப்பட்ட சம்பளம் வழங்கல் திருத்த சட் டத்தை மேலும் திருத்துவதற்கான சட்ட முன் வடிவு பற்றி மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக எங்களுடைய நிலையைத் தெளிவு படுத்த விரும்புகிறேன்.

சமீப காலத்திற்கு முன்பு இந்த சட்டப் பேரவையில் இருக்கக் கூடிய கட்சிகளோடு தமிழ்நாடு அரசாங்கத்தின் சார்பில் அமைச் சரவர்கள் இந்தப் பிரச்சினையைப் பற்றி விவாதித்த நேரத்திலே மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே அவரிடத்திலே

*1979, ஏப்ரல் 24 ஆம் நாள் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றது.